# ஆராய வேண்டாம்... புரிந்துகொள்வோம்!

**வாழ்க்கையின் அப்லோடும் டவுன்லோடும்! 9**

■ காம்கேர் கே.புவனேஸ்வரி

ஹோட்டல் வாசலில் ஆரஞ்சு கலர் டி-ஷர்ட்டுடன் பார்சலுக்காகக் காத்து நிற்கும் உணவு டெலிவரி நிறுவன இளைஞர் கூட்டத்தைக் கடந்து வந்தபோது, ‘இவர்களில் பலர் எஞ்சினியரிங் படித்திருக்கிறார்கள்’ என்று படித்த செய்தியும் நினைவுக்கு வந்தது. மொபைல் ஆப் மூலம் உணவை ஆர்டர் செய்கிறவர்களுக்கு, அவர்கள் கேட்கும் ஹோட்டலில் இருந்து அவர்கள் குறிப்பிடும் உணவை வாங்கி அவர்கள் இருப்பிடத்துக்கே டெலிவரி செய்யும் உணவோட்டிகள் இவர்கள்.

‘இதெல்லாம் பெண்கள் வேலை’ என சொல்லி வீட்டு வேலைகளிலிருந்து தப்பிக்கும் ஆண்கள், பொதுவெளியில் பொறுப்பாக இயங்குவதைக் காணும்போது ஆச்சர்யமாகவே இருக்கிறது.

உங்கள் அம்மாவும், உங்கள் பாட்டியும் என்றாவது சமையல் செய்யாமலோ அல்லது வீட்டு வேலைகள் செய்யாமலோ இருந்திருக்கிறார்களா..? வீட்டில் சண்டைகள் இருக்கும், உறவுகளுக்குள் கோப தாபங்கள் இருக்கும், குடும்பத்தில் நல்லது கெட்டதுகள் நடக்கும். ஆனாலும் தங்கள் வேலைகளை அவர்கள் செய்யத் தவறியதை என்றேனும் நீங்கள் பார்த்திருப்பீர்களா? சுயநினைவே இல்லாமல் போனால் தவிர, தங்கள் வேலைகளை அவர்களால் செய்யாமல் இருக்க முடியாது. உங்கள் சகோதரிகள், மனைவி என எல்லா பெண்களுமே பெரும்பாலும் இப்படித்தான் வாழ்ந்து வருகிறார்கள். உங்கள் மகளும் இப்படித்தான் வாழப் பழகுவாள்.

இன்று பெண்கள் தங்களுக்கு முடியவில்லை என்றால் வீட்டு வேலைக்கு பணிப்பெண்களை அமர்த்திக்கொள்கிறார்கள், சமைக்க நேரமில்லை என்றால் ‘ஹோட்டலுக்குச் செல்லலாம்’ என சொல்கிறார்கள். வழக்கமான தங்கள் பணிகளிலிருந்து விடுவித்துக்கொள்ள, ஒரு மாறுதலாக இப்படி வெளியில் செல்லலாம் என்று நினைக்கிறார்கள். இது நல்ல மாற்றம்தான். ஆனாலும், வீடுகளில் நாள் தவறாமல் செய்ய வேண்டிய அடிப்படை வேலைகளை பெண்கள்தான் செய்கிறார்கள், பெரும்பாலான இடங்களில்.

வீட்டில் சாப்பிட்ட தட்டைக்கூட அப்படியே வைத்துவிட்டுச் செல்லும் ஆண்கள்தான், ஹோட்டல்களில் இன்முகத்துடன் சாப்பாடு கேட்டுக் கேட்டு பரிமாறுகிறார்கள். வாடிக்கையாளர்களின் முகம் அறிந்து ‘அப்புறம் என்ன சாப்பிடறீங்க?’ என பரிவுடன் உபசரிக்கிறார்கள். சிடுசிடுக்கும் வாடிக்கையாளர்களை தங்கள் இனிய வார்த்தைகளால் ஆற்றுப்படுத்துகிறார்கள். ஹோட்டலைப் போலவே திருமணம் போன்ற சுபநிகழ்வுகளிலும் விழாக்களிலும் சமையல் செய்வதும், பரிமாறுவதும் ஆண்களே.

இன்று ஹோட்டல் வாசலில் பொறுமையாகக் காத்திருந்து, உணவுப் பொட்டலங்களை வாங்கிக்கொண்டு பைக்கில் பறந்து பறந்து சென்று, எங்கேயோ காத்திருக்கும் முகம் தெரியாத நபர்களுக்கு உணவை டெலிவரி செய்து சம்பாதிக்கும் இளைஞர்களில் பலரும், தங்கள் வீட்டில் சாப்பிட்டவுடன் அம்மாவைப் பார்த்து ‘நீ சாப்பிட்டாயாம்மா?’ என கேட்க வேண்டும் என்ற அடிப்படை உணர்வுகூட இல்லாதவர்களாக இருக்கக்கூடும்.

வீடுகளில் பெண்கள் தங்களுக்கே தங்களுக்கென்று சில வேலைகளை வைத்துக்கொண்டு, அந்த ஏரியாவுக்குள் ஆண்களை வரவிடாமல் செய்கிறார்கள். இது அவர்களைத் தங்கள் கட்டுக்குள் வைத்திருக்க உதவும் ஓர் உளவியல்தான். இயற்கையான சில விஷயங்களைத் தவிர, பெண்களுக்கு எதெல்லாம் சாத்தியமோ அதெல்லாம் ஆண்களுக்கும் சாத்தியமே! பெண்கள் சூழ வளரும் ஆண்களுக்கு வீட்டில் அவற்றை





சாத்தியப்படுத்த அவசியம் இல்லாமல் போய்விடுகிறது என்றுதான் சொல்ல வேண்டும். அவ்வளவுதான்!

இந்த உலகில் தன் வாழ்க்கை முழுவதையும் குடும்பத்துக்காகவே அர்ப்பணிப்பதில் நம் அம்மாக்களை மிஞ்ச வேறு யாரும் இருக்க முடியாது. அம்மாக்களுக்கு தமிழ் சினிமாக்கள் வகுத்த இலக்கண இலக்கியங்களும், முந்தைய தலைமுறை அம்மாக்கள் வாழ்ந்து சென்ற வாழ்க்கையும் ‘அம்மா என்றால் இப்படித்தான் இருக்க வேண்டும்’ என்ற மனோபாவத்தை உருவாக்கி வைத்துள்ளன. இதைப் பார்த்து தாங்களும் குழம்பி, அம்மாவையும் குற்ற உணர்ச்சிக்கு ஆளாக்கும் பிள்ளைகள் இங்கு அதிகம்.

அம்மாக்களைப் புரிந்துகொள்வது குறித்து மேனா வாஹினி என்பவர் ஃபேஸ்புக்கில் ஆங்கிலத்தில் பதிவிட்டிருந்ததில் என்னுடைய கருத்துகளையும் இணைத்து இதோ உங்கள் பார்வைக்கு...

● சோர்வாக இருப்பதாகச் சொல்லி அம்மா ஓய்வெடுத்தால், அவர் தான் பெற்ற பிள்ளைகளை மறந்துவிட்டார் என பொருளல்ல. அம்மாவுக்கு சோர்வாக இருக்கிறது. அவ்வளவுதான்!

● அம்மா சில நேரங்களில் தனிமையில் இருக்க விரும்புவதாகச் சொன்னால், அவருக்குத் தாய்மையில் விருப்பமில்லை என்றோ, பிள்ளைகளை வெறுக்கிறார் என்றோ பொருள் அல்ல. நாள் முழுவதும் மற்றவர்களுக்காக உழைக்கும் அம்மா, தனக்கான நேரத்தை அனுபவிக்க நினைக்கிறார். அவ்வளவுதான்!

● சமையல் அறையில் தனக்கு உதவி தேவைப்படுகிறது என்று அம்மா சொன்னால், ‘அவர் யார் துணையும் இன்றி வேலை செய்ய முடியாது என்று பொருள் அல்ல. அவருக்கு அன்று உதவி தேவை. அவ்வளவுதான்!

● அம்மா ஒரே ஒருநாள் காலை டிபனுக்கு நூடுல்ஸ் சமைத்துக் கொடுத்தால், அவருக்குக் காய்கறிகள் சமைக்கவே தெரியாது என்றோ, இனி பிள்ளைகளுக்கு அவர் காய்கறியே சமைக்க மாட்டாள் என்றோ பொருள் அல்ல. அன்று அவருக்கு டிபன் செய்ய நேரம் இல்லாமல் இருந்திருக்கலாம். அவ்வளவுதான்!

● நீங்கள் வீட்டுக்கு வரும்போது அம்மாவின் முகம் அழுது வடிந்துகொண்டிருந்தாலோ அல்லது வீடு சுத்தமாக இல்லாமல் இருந்தாலோ, அவர் எப்போதுமே இப்படித்தான் இருக்கப் போகிறார் என்று பொருள் அல்ல. அன்று அம்மாவுக்கு நேரம் இல்லாமல் இருந்திருக்கலாம்; அல்லது உடல்நலம் சரியில்லாமல் இருக்கலாம். அவ்வளவுதான்!

● அம்மா தன் தோழிகளுடன் ஒரு நாள் வெளியில் செல்வதாகச் சொன்னால், அவருக்கு குடும்பத்தின் மீது பாசம் இல்லை என்று பொருள் அல்ல. அவருக்கு ஒரு மாறுதல் தேவையாக இருக்கலாம். அவ்வளவுதான்!

● அம்மா ஏதேனும் ஒரு விஷயத்துக்காக பயந்தால், அவர் பயந்தாங்கொள்ளி என்று பொருள் அல்ல. அம்மாவுக்கு அந்த குறிப்பிட்ட விஷயத்தில் பயம். அவ்வளவுதான்!

● அம்மா உங்களிடம் ஏதேனும் ஒரு விஷயத்துக்காக கோபமாகப் பேசினால், அவர் தேவையில்லாமல் கத்துவதாக பொருள் அல்ல. அப்படி கத்த ஆரம்பிப்பதற்கு முன், 300 முறை அதே விஷயத்துக்காக மென்மையாகவே உங்களிடம் பேசியிருப்பார் என்பதை நினைவில் வையுங்கள். அவ்வளவுதான்!

அம்மாவை ஆராய வேண்டாம். புரிந்துகொள்வோம்.

**இந்த மாத அப்லோடும் டவுன்லோடும்!**

**இயற்கையான சில விஷயங்களைத் தவிர, பெண்களுக்கு எதெல்லாம் சாத்தியமோ அதெல்லாம் ஆண்களுக்கும் சாத்தியமே! பெண்கள் சூழ வளரும் ஆண்களுக்கு வீட்டில் அவற்றை சாத்தியப்படுத்த அவசியம் இல்லாமல் போய்விடுகிறது!**



**காம்கேர் கே.புவனேஸ்வரி**